






# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 25 2.07.2026



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:



# முத்துக்கள்
## ஸ்வாமி தேஶிகனின் ப்ரதான சதகம்

**பின் இதழின் தொடர்ச்சி**

61. வைராக்யம் அதிக உள்ளவர். நம்முடன் சேர்ந்து வாழ்வதில் ப்ரதானர்

62. அபராதம் செய்வதில் பயமுள்ளவர்கள், அவதாரங்களை போல தம்முடைய மஹிமையை மறைத்து வைத்திருப்பவர்கள், பயப்படவேண்டியவரில் ப்ரதானர் (நாம் ஸாதாரணமாக இவர்களை நினைக்ககூடாது க்ருஷ்ணனை சாதாரண நண்பனாக நினைத்தான் ஆர்ஜுனன். ஆனால் க்ருஷ்ணன் தன்னை விளக்கியபோது நடுநடுங்கி நின்றான்)

63. பக்தி பரவசர்களானவர்களிடம் பரீதி செய்து பழகுதல் ப்ரதானம்

64. இப்படிப்பட்டி பாகவதர்களில், இவர்களுக்கு நாம் செய்யும் கைங்கர்யங்களில், குரோ : குருதரம் நாஸ்தி (ஆசார்யன விட மேலானது ஒன்றுமில்லை) என்பதற்கிணங்க ஆசார்ய கைங்கர்யம் ப்ரதானம்

65. ஆசார்ய கைங்கர்யமும், பாகவதகங்கர்யமும் கூடினால் ஆசார்ய கைங்கர்யம் தான் மிகவும் ப்ரதானம்

64. இப்படி ஆசார்யனும், பாகவதர்கள் எல்லாவகையும் கூடி வந்தால் மிகமிகநல்லது

67. இவற்றில் நமக்கு முடியாதபோது, எம்பெருமான் உகந்தது ப்ரதானம்

68. இப்படிப்பட்ட கைங்கர்யங்களில் நறம் "மனவுகப்பே" ப்ரதானம் "செம்மையுடைய திருவரங்கர்தாம் பணிந்த மெய்வார்த்தை" நாச்சியார் திருமொழி முதலிய பாசுரங்களால் இவற்றை தெளியலாம்.

69. நமக்காக நாம் செய்து கொள்ளும் கார்யங்கள் சுயலாபமுடையவைகள். கர்மங்களை பெருக்குமவையும் ஆகும். ஆனால் கைங்கர்யங்களில் "நாம்" மகிழ்ச்சி அடைந்தாலும் அதில் சுயநலமில்லாமையால் மகிழ்கிறார் என்று எண்ணுதல் ப்ரதானம் பகவான்

70. இப்படி நாம் செய்யும் பகவத் கைங்கர்யங்களில் பரவ்யூஹ முதலான மான க்ரமங்களில் "பரவாஸுதேவ" கைங்கர்யம் ப்ரதானம்

71. பரவாஸுதேவனுக்கு இங்கிருந்து கைங்கர்யங்களும், வியூஹத்தில் எம்பெருமானுக்கு இயலாததாகையாலும், பகவான் செய்தருளிய எந்த அவதாரித்திலும் ருசி பெற்று. அவற்றில் "பரத்வ" சிந்தனை கொண்டு கைங்கர்யம் செய்வது ப்ரதானம் (இப்படி விபவ அவதார எம்பெருமான்களை அர்ச்சையில் அமைத்துக் கொண்டு "பரத்வ" சிந்தனையோடு கைங்கர்யம் செய்து ப்ரதானம் )

72. இந்த சேதனனுக்கு இடைவிடாது ஏதாவது ஒரு ப்ரவிருத்தி நிவருத்தி கைங்கர்யங்கள் இருந்து கொண்டேயிருக்கும் இப்படி இருக்கும் காலங்களை 4 நான்கு யுகங்களின் "உண்மை தன்மை" அதிகமிருக்கும் க்ருதயுகம் ப்ரதானம்

73. இப்படிப்பட்ட நான்கு யுகங்களில், "உபாயம்" சிறிது மற்றும் பலன் பெரிது ஆயிருப்பதால் கலியும் ப்ரதானமே

74. கைங்கர்யங்களில் "விசித்ரா தேஹ ஸம்பத்தி:" (விஷ்ணு தர்மம்) ப்ரஹ்மனே! கை கால் முதலிய அவயவங்களுடன் சரீரத்தை ஆச்சர்யமாக முன்பே அமைத்திருப்பது எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவே) என்று பொருள். ஆகையால் உள்ளம், உரை. செயல் இம்மூன்றும் பிரதானமாகும்.

75.இவைகள் ஒருமித்தபின், வெளிப்படையான வஸ்துக்களில் துளசீ, தீர்த்தம் போன்ற சாஸ்த்ர விரோதமில்லாத பொருட்கள் ப்ரதானம்

76 கைங்கர்யம் செய்யும் இடங்களில், பாகவதகர்கள் மிகுந்த வாழ்கிற பகவத்க்ஷேத்ரம் ப்ரதானம்

77. அப்படிப்பட்ட க்ஷேத்ரங்கள் ஐந்தாகும் : ஸ்வயம்வயக்தம் (தாமே தோன்றி) ஸைத்த (ஸித்த புருஷர்கள் ப்ரதிஷ்டைசெய்த) ஆர்ஷ (ரிஷிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட) மானுஷ (மனிதர்கள் நிறுவிய) வைஷ்ணவ (விஷ்ணு பக்தர்களால் அமைக்கப்பட்ட) க்ஷேத்ரங்கள் இந்த க்ரமத்தில் ப்ரதானம்

78. இப்படிக் கிடைக்காத போது பக்தர்கள் மிகுந்திடும் ஊர்ப்ரதானம் வைகுந்தமாகும் தமரூரெல்லாம்' (திருவாய்மொழி) (திருவாய்மொழியை சொல்ல வல்லார் இருக்கும் இடமெல்லாம் பரமபதமாகும் என்பது ஆழ்வார் கூற்று).

79. இப்படி கைங்கரியம் செய்யும் பக்தர்களில், அவர்கள் தீர்த்தமாடும் தீர்த்தங்களில், "மானஸம்" என்றும் பகவத் சிந்தமே உயர்ந்த நீராட்டமாகும் அவைகளில் மூழ்கியிருப்பவர்களே ப்ரதானர்

80. கைங்கர்யம் புரியும் நிலைகளில் (நேரங்களில்) சாண்டில்யர் போன்றவர்கள் உரைத்த திரிகரண சுத்தியுள்ள நிலைப்ரதானம்

81. இப்படி காட்டப்பட்ட திரிகரண தோஷங்களில் எல்லாவற்றையும் விடவேண்டியது ப்ரதானம். இதில் கோபம் மிகவும் கொடியது என்று அறிவதுபோல் கோபத்தை வெறியாக மாற்றிவிடும் காட காமம் ப்ரதான மாகும் (அதாவது காமம் விடவேண்டியவற்றில் ப்ரதானம் என்று உணரவேண்டும்)

82. இப்படி தோஷங்கள் நமக்குள்ளே வராதபடி செய்வதற்க்கு, மிகவும் சீலராகஉள்ள ஆசார்யரோடு உற்றிருப்பது ப்ரதானம்

83. மன்னிக்க முடியாத குற்றங்களில், தாங்கமுடியாத குற்றம் அஸஹ்யாபசாரம் ப்ரதானம்

84. அதன் வழியில் "நன்றி மறந்தவன்" முக்கிய ப்ரதானன்.

***மீதி அடுத்த இதழில்***..........................தொடரும்